மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) தோட்ட வளர்ச்சித் திட்டத்தின்கீழ் வட ஆர்க்காடு மாவட்டத்தில் 1970-71-ல் 60 பேருக்கு ரூ. 62,500 கடனுகை வழங்கப்பட்டது.

(இ) மொத்தப் பரப்பளவு 140 ஏக்கர்.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, வட ஆர்க்காடு மாவட்டத்தில் வேலூரிலே பழப் பதனிடும் தொழிற்சாலை இருக்கிறது. அந்தத் தொழிற்சாலைக்குப் போதிய பழங்கள் கிடைக்கவில்லை. எனவே பழம் உற்பத்திச் செய்யும் தோப்புகளை அதிகமாக ஏற்படுத்துவதற்கு அரசு மானியத் தொகையும், கடன் தொகையும் அதிகமாகக் கொடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பழ உற்பத்தியைப் பெருக்கும் திட்டம் தொடங்கிவைக்கப்பட்டது. புதிய பழத்தோட்டங்கள் அமைப்பதற்காக நீண்டகாலக் கடன் வழங்குவதன்மூலம் பழ உற்பத்தியைப் பெருக்கும் திட்டம் தொடங்கிவைக்கப்பட்டது. பழத்தோட்ட வளர்ச்சி சிறப்புப் பணியாளர்களின் இடைவிடா முயற்சியின் காரணமாக, பழத் தோட்டப் பரப்பளவும் பழ உற்பத்தியும் குறிப்பிடத்தக்க அளவு உயர்ந்தன. ரூ. 13 லட்சம் நீண்ட காலக் கடன் வழங்கியதின் வாயிலாக, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் கூடுதலாக 4,350 ஏக்கரில் பழத்தோட்டங்கள் உண்டாக்கப்பட்டன. பழத்தோட்டங்கள் உண்டாக்க உயர்ந்த அளவு ரூ. 2,000 என்ற வரையறைக்கு உட்பட்டு ஒவ்வொருவருக்கும் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 300 என்ற வீதத்தில் நீண்டகாலக் கடன் வழங்கப்படுகின்றது. திராட்சைப் பழத் தோட்டங்கள் உண்டாக்க ஒருவருக்கு உயர்ந்த அளவு ரூ. 6,000 என்ற வரையறைக்கு உட்பட்டு எக்கர் ஒன்றுக்கு ரூ. 1,500 நீண்டகாலக் கடன் வழங்கப்படுகின்றது.

திரு. தொ. ப. சீனிவாசன் : பழத்தோட்டங்கள் ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாகப் பராமரிக்கப்பட்டு வந்தது. இப்பொழுது ஊராட்சிகளின் மூலம் பராமரிக்கப்படுவதால் சரியான பராமரிப்புச் செய்யமுடியாததால் அவை பாழாக்கப்பட்டுவிடுகின்றது. எனவே, ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாக அவைகளைப் பராமரிப்புச் செய்ய அரசு வழிவகை செய்யுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, அவர்களே பாழாக்கப்பட்டுவிடுகின்றது என்று சொன்னார்கள். எனவே, மேலும் பாழாக்க அரசாங்கம் விரும்பவில்லை.

Banana cultivation in Dharmapuri district.

• 287 *Q.*—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there is any proposal to bring more area under expert type of banana cultivation in Dharmapuri district; and

(*b*) if so, when it will be implemented?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) & (இ) ஆம், வேலூரிலுள்ள சிறப்பு, மாவட்ட விவசாய அலுவலர் (வாழை) இதற்கான திட்டக் குறிப்பை அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். அக்குறிப்பு கிடைத்ததும், மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

Adayar foot bridge.

* 288 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether it is a fact that the foot bridge over Adayar river linking the Elliots Beach with Foreshore Estate had cracked on 1st December 1969;

(*b*) if so, the details thereof;

(*c*) the total amount spent for the construction of the original bridge; and

(*d*) the estimated cost of reconstruction of the bridge?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) அடையாற்றின் மேலுள்ள நடை பாலம் 20—11—1969 இரவு பழுதடைந்தது.

(இ) நடைபாலத்தில் உள்ள 17 கண்வாய்களில் 3 கண்வாய்கள்தான் நீரை வெளியேற்றிக்கொண்டிருந்தன. மற்றவைகள் மணல்திட்டினால் மூடப் பட்டுவிட்டன. அதிக மழைபெய்ததாலும் தண்ணீர் வெளியேற்றுவதற்கு இடம் குறைந்ததாலும் ஏற்பட்ட நீர்ச்சுழலினால் வடக்குப் பக்கத்திலிருந்து 9-வது தாங்குச் சுவரின் அடிப்பாகம் அரிக்கப்பட்டு 4 அடி 3 அங்குலம் ஆழத் திற்கு தண்ணீரில் மூழ்கிவிட்டது. தாங்குச் சுவரின்மேல் பொருத்தப்பட் டிருந்த விட்டமும் தண்ணீரில் அமிழ்ந்துவிட்டது.

(உ) ரூபாய் 5,92,539-13.

(எ) ரூபாய் 19,450.

DR. H. V. HANDE: May I know whether reconstruction is over? If so, may I know the date on which the repair was made?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: 10—4—1970-இல் செப்பனிடும் வேலை நடந்து முடிவடைந்துவிட்டது.

Electricity supplied to agriculturists in Thiruchiroppall district.

* 289 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether the Government are aware that the South Madras Electric Supply Corporation, Tiruchirappalli is charging Rs. 0-12½ per unit for the Electricity supplied to the agriculturists of Tiruchirapalli; and

(*b*) if so, whether the Government have any proposal to instruct the Corporation to reduce the charges?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (அ) ஆம்.

(இ) இல்லை.